5. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர்களுக்கு "டாம்ப்கோ" ஹேர் டானிக் மற்றும் முக "கிரீம்" வழங்குதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏதோ 'பற்பசையை' உறுப்பினர்களுக்கு வழங்குவதுபற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் என்னிடம் சொன்னார்கள். இப்போது சொன்னால் வாங்குவார்கள். சித்த மருத்துவத் துறையிலிருந்து புதிதாக ஒரு பற்பசை கண்டு பிடித்திருக்கிறார்கள். அது உறுப்பினர்களுக்கு, நூலகப் பிரிவு-2 அறையிலிருந்து கொடுக்கப்படுகிறது. அதை உறுப்பினர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை பதிலுரையின்போது சேர்த்துக் கொள்ளலாம் என்று இருந்தேன். 'டாம்ப்கோ' என்ற ஒரு ஹேர் டானிக் தயாரிக்கிறார்கள். அதைப்பற்றி விரிவாக பின்னால் சொல்கிறேன். அது மிக அருமையாக, முடி கொட்டாமல், நரைக்காமல் (சிரிப்பு) இன்னும் சொல்லப் போனால்.. (திரு. திருநாவுக்கரசு எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லட்டும். தங்களுக்கு முடி இருக்கிறது. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : நான் சொல்லி முடிக்கிறேன். (குறுக்கீடு) அவர் என்ன கேட்க வருகிறார் என்று தெரிகிறது. (சிரிப்பு)

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களுக்கு முடி இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அவர் என்ன கேட்பதற்கு முயற்சிக்கிறார் என்பது எனக்குத் தெரியும் (சிரிப்பு) நல்ல வேளையாக அதை நான் கொஞ்சம் நாளைக்கு முன்னால்....

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு முடி இருக்கிறது. உங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். (பலத்த சிரிப்பு). திரு. எஸ். திருநாவுக்கரசு.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருக்குத் தான் முன்புறம் முடி இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அவரும் இதைப் பயன்படுத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். அவர் முதலிலே எங்களோடு இருந்தபோது சில யோசனைகளைச் சொல்லி எனக்கு இப்படி ஆகிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப்பின்னால்தான், நான் அதைக்கூட எழுதி வைத்திருக்கிறேன். உரிய நேரத்தில் இந்த ஆயிலை, எண்ணெயை ஒருவர் என்னுடைய கையில் கொடுத்ததால் இருப்பதையாவது காப்பாற்றிக்கொள்ள முடிந்தது. எனவே, அதை அவர் கூட பயன்படுத்திக்கொள்ளலாம். இப்போது அவர் நிலைமை வேறு விதமாக இருப்பதால் இனிமேல் நிலைமைகள் வேறு விதமாக இருக்கும் என்கிற காரணத்தினால், கொஞ்சம் காப்பாற்றிக்கொள்வது சிரமமாக இருக்கும். (சிரிப்பு) எனவே, அவர்கூட அதை பயன்படுத்தலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல 'டாம்ப்கோ'வில் முகத்திற்கு ஒரு கிரீம் தயாரிக்கிறார்கள். அதைப் பயன்படுத்தினால் — அது குறிப்பாக பெண்கள் பயன்படுத்துவது. ஆனால் ஆண்கள் கூட பயன்படுத்துவதில் தவறு இல்லையென்று கருதுகிறேன் — முகம் பொலிவுடையதாக இருப்பதற்கு சிறப்பாக இருக்கும். அதைப் பற்றி கடைசியில் சொல்கிறேன்.

இப்போது மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் மற்ற அத்தனை பேருக்கும், இங்கே இருக்கின்ற அத்தனை பேருக்கும் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது 'ஃபிரி'தான். இனிமேல் காசுகொடுத்து வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை நூலகப் பிரிவு 2-ல் வழங்கப்படுகிறது. உறுப்பினர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.